செ.வெ.எண்:01 நாள்:5.9.2021

# மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதினை மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ராஜகுமார் அவர்கள் முன்னிலையில் ஆசிரியர்களுக்கு வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதினை மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ராஜகுமார் அவர்கள் முன்னிலையில் ஆசிரியர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது…

கல்விக்கும், தமிழுக்கும் புகழ் சேர்க்கின்ற மயிலாடுதுறை மாவட்டத்தில் மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்குகிற கடமை ஆசிரியர்களுக்கு இருக்கிறது. இன்றையதினம் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தில் டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதும் சிறந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவர்களையும் நல்ல புத்திசாலியாக உருவாக்குகிற பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளது. போட்டித்தேர்வில் பங்கேற்க மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

இக்கொரோனா காலக்கட்டத்தில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் இணைய வழியில் கல்வி பயிற்றுவித்து வருகிறார்கள். இது மிகப்பெரிய சவாலாக இருந்தாலும் இணைய வழி கல்வி பயிற்றுதலிலும் ஆசிரியர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். இணைய வழியில் ஆசிரியர்கள் கல்வி பயிற்றுவிக்கும் போது மாணவ, மாணவிகளிடம் கைப்பேசியை இணைய வழி கல்விக்காக மட்டுமே பயன்படுத்தவும், மற்ற நேரங்களில் கைப்பேசி பயன்படுத்துவதை தவிர்க்கவும் என்று எடுத்து கூறவும். மாணவர்களின் எதிர்கால கனவை கல்வியால் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்பதை அவர்களுக்கு உணர்த்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து சீர்காழி , சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி இயக்குநர் திரு.ச.முரளிதரன், சீர்காழி வட்டம் இனாம்சீயாளம் ஊராட்சி

ஒன்றியத் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் திரு.செ.சண்முகசுந்தரம், மங்கைமடம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு.அ.இராசசேகர், கொருக்கை அரசு மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் திரு.அ.அப்துல்ரகீம், சீர்காழி விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் திரு.பா.ஜோஸ்வா பிரபாகர சிங் ஆகிய 5 ஆசிரியர்களுக்கு தலா ரூ.10 ஆயிரத்திற்கான காசோலை, வெள்ளிபதக்கம் மற்றும் சான்றிதழ் அடங்கிய நல்லாசிரியர் விருதினை மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திரு.மதிவாணன், மாவட்ட கல்வி அலுவலர் திரு.குமார், மாவட்ட ஆட்சியரக மேலாளர் திரு.சங்கர் மற்றும் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.